**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.32/2023**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | அபிதாமேரி (PW1) | Caste | |
| Husband's Name | அமல்ராஜ் | Calling | |
| Village | சின்னகருணைபாளையம் | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21th day of January 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused A2 present, Accused A1 absent petition filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 21.06.2022 ஆம் தேதி பகல் 2.00 மணியிருக்கும் நாங்கள் வைத்திருக்கும் மளிகை கடையில் நான் இருந்தபோது என் கடைக்கு சிகரெட் வாங்குவதற்கு ஒரு நபர் வந்தார். வாங்கிக் கொண்டு இருக்கும்போதே நான் கழுத்தில் அணிந்திருந்த 1 1/2 பவுன் எடையுள்ள தங்க செயினை பறித்துக் கொண்டு சென்றுவிட்டார். எனது மகளை நான் கையில் வைத்திருந்ததால் அந்த நபரை சரியாக பார்க்க முடியவில்லை.

2. எனது கணவருக்கு போன் செய்து அவர் வந்தவுடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். **புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒரு வாரம் கழித்து நகை கிடைத்துவிட்டதாக போலீசார் சொன்ன தகவலின்பேரில் காவல் நிலையம் சென்று நகையை அடையாளம் காட்டி பின்பு நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 3 புகைப்படங்களில் உள்ள நகைதான் என்னிடம் இருந்து பறிக்கப்பட்டு பின்பு நீதிமன்றத்தில் இருந்து நான் பெற்றுச் சென்றதாகும். **புகைப்படங்கள் (எண்ணிக்கை.3)அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

1.நான் BCA வரை படித்துள்ளேன். நான் இருந்த கடை எந்த திசையை நோக்கி உள்ளது என்று போலீசார் விசாரணை, புகார் மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் போலீசார் என்னை கேட்கவில்லை. களவு போன நகையின் வடிவமைப்பு குறித்து போலீசார் விசாரணை, புகார் மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல களவு போன நகையை நான் அணிந்திருந்த புகைப்படத்தில் போலீசாரிடம் விசாரணைக்காக கொடுத்திருந்தேன்.

2. புகாரில் களவு போன தங்க நகையின் வடிவமைப்பு உருவ அமைப்பு குறித்து கூறியுள்ளேன். களவு போன நகை எனக்கு எனது பெற்றோர் கொடுத்தது மேலும் அது வாங்கப்பட்டு அதிக நாட்கள் ஆகிவிட்டதால் அது வாங்கி இரசீது எதுவும் என்னால் கொடுக்க இயலவில்லை. சங்கிலியை பறித்து சென்றவர் உருவ அமைப்பு ஆடை நிறம் குறித்து போலீசார் விசாரணை, புகார் மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல போலீசார் விசாரணையின் போது எதிரி அணிந்திருந்த உடை குறித்து கூறியுள்ளேன்.

3. என்னிடம் பறிக்கப்பட்ட நகை அதன் கொக்கி விரிவடைந்துதான் தனியாக வந்தது என்றால் சரியல்ல தங்க சங்கிலி அறுந்துதான் தனியாக வந்ததாக உணர்ந்தேன். போலீசார் அடையாளம் காண்பித்தபிறகுதான் எதிரியை எனக்கு அடையாளம் தெரிந்தது என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து நகை கைப்பற்றபட்டபிறகுதான் நகை என்னுடையது என தெரியவந்தது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்று சென்ற நகை முழுமையானது என்றால் சரிதான்.

4. நான் நீதிமன்றத்தில் இருந்து வாங்கி சென்ற நகை அறுந்துதான் இருந்தது. நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்ற நகைக்கான புகைப்படத்தில் தங்க சங்கிலி அறுந்துள்ளதாக இல்லை என்றால் சரியல்ல அறுந்துதான் இருந்தது. நகை என்னுடையது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் தவறான முறையில் அடையாளம் காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் விடுதலை ஆகதக்கவர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>VELLINGIRI LOGANATHAN Digitally signed by VELLINGIRI LOGANATHAN Date: 2025.01.21 19:27:42 +0530<br><br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |